தலைவர் என்ற முறையில், உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தேன். உங்கள் கருத்தை நீங்கள் சொல்லிவிட்டீர்கள். நான் பதில் சொல்லிவிட்டேன். அதனால், பிறகு வாய்ப்பு வரும்போது பேச அனுமதியளிக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது குறுக்கீடு செய்யாதீர்கள். அவர் பேசட்டும். உட்காருங்கள்.

தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் (திரு. சி. மைக்கேல் ராயப்பன், திரு. செ. அருண்பாண்டியன், திரு. ஆர். சுந்தர்ராஜன், திரு. க. பாண்டியராஜன், திரு. க. தமிழழகன், திருமதி ஆர். சாந்தி, மற்றும் திரு. மு. அருண் சுப்பிரமணியன் ஆகியோரைத் தவிர) அவையிலிருந்து வெளியேறினர்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம், மதிப்பீட்டுக் குழுத் தலைவர் அவர்கள்.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ் மக்கள் நலனே தன் நலன்' என்ற உயரிய நோக்கத்தோடு, இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக்க நாளெல்லாம் உறக்கமின்றி, சிந்தித்து, உழைத்து (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துத் தரப்பு தமிழ் மக்களும் முன்னேற்றமடைய தினம் தினம் முத்தான பல திட்டங்களைத் தந்து, தமிழக மக்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்கி, இந்தியத் திருநாட்டில் முன்னோடி மாநிலமாக உயர்த்தி, தமிழ் மக்களின் நெஞ்சங்களெல்லாம் நீங்காது நிறைவாக நிறைந்த தமிழ்த் தாயின் தலைமகள், நாங்கள் தினமும் வழிபடும் குல தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2013-2014 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் 12-வது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். நன்றி.